

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றினார். உடன் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் இராதாமங்கலத்தில் தி.மு.க. சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள அண்ணா படிப்பகத்தை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.கௌதமன். தலைமை செயற்குழு உறுப்பினரும் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ப. கோவிந்தராஜன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. பழனிப்பன் கிளை செயலாளர் ப.சேதுராமன் ஆகியோர் உள்ளனர்.

### கரூர் மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும்

# கழக உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு - மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டம்

## மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி அறிக்கை!



கரூர், ஜூலை 2-

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு எனும் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு பிரச்சார பொதுக்கூட்டம் 2ம் தேதி (இன்று) புதன்கிழமை மாலை 6 மணி அளவில் கரூர் உழவர் சந்தை அருகில் நடைபெறுகிறது. தலைமைக் கழக பேச்சாளர் ஆரூர் மணிவண்ணன் சிறப்புரையாற்றுகிறார்.

அது சமயம் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு வி. செந்தில் பாலாஜி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினின்

# “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த வேண்டும்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தலைமையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், ஜூலை 2-

நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்டரங்கில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். தொகுதி பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்துகொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். அப்போது, கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கையை, ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக கிளை, வார்டுகளில் தீவிர படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர்மன்ற, பேரூர் மன்ற தலைவர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### என்.கௌதமன் தலைமை ! ப.கோவிந்தராஜன் முன்னிலை! இராத மங்கலத்தில்

# அண்ணா படிப்பகம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

## கே.பழனியப்பன் - ப.சேதுராமன் பங்கேற்பு!

நாகை. ஜூலை 2 -

நாகை மாவட்ட கீழ்வேளூர் ஒன்றியம் இராதாமங்கலத்தில் தி.மு.க. சார்பில் 1971ம் ஆண்டு அண்ணா படிப்பகம் கூரை கொட்டகையில் தொடங்கப்பட்டு இனமான பேராசிரியர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 54 ஆண்டுகளுக்கு பின் புதிய கட்டிடம் கிளை செயலாளர் ப. சேதுராமன் குடும்பத்தினரால் கட்டித் தரப்பட்ட அந்த அண்ணா படிப்பகம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் என். கௌதமனை தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப. கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கா.பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஜெய்சங்கர் வரவேற்றார். அண்ணா படிப்பக புதிய கட்டிடத்தை பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி திறந்து வைத்து படிப்பக வளாகத்தில் அண்ணா சிலையையும் திறந்த வைத்து போகையில் 13.4.1971ம் ஆண்டு பேராசிரியர் அவர்களால் ஓலை கொட்டகையில் படிப்பகத்தில் திறந்து வைக்கப்பட்டது. திராவிட இயக்கம் அறிவு சார் மக்களை உருக்க நீதி கட்சி காலத்தில் இருந்து பாடு பட்டு கொண்டு இருக்கிறது என்பதற்கு இது எல்லாம் சாட்சியாக, காட்சியாக விளங்கி கொண்டுள்ளது. கலைஞர் சொன்ன விளக்க உரையை மெய்ப்பிக்க கூடிய இடம் படிப்பகம் தான், அறிவு சார்ந்தவை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் படிப்பகத்திற்கு வந்து படிக்கின்ற பழக்கத்தை வைத்து கொள்ள வேண்டும். சில கட்சிகளை சேர்ந்தவர்கள் அண்ணாவின் பெயரை தனது கட்சியில் வைத்து கொண்டுள்ளனர். அந்த கட்சி கட்சியின் கொடியில் தான் அண்ணா பறக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்த வரை அண்ணா கொடி கட்சி பறக்கிறார். அந்த அண்ணா படிப்பகம் இப்போது இராதாமங்கலத்தில் திறக்கப்பட்டுள்ளது. இந்த படிப்பகத்திற்கு வந்து நினசரி செய்திதாள்களை ஒரு 5 நிமிடமாவது படித்து செல்லுங்கள். திராவிட மாடல் ஆட்சி என்னன்ன திட்டங்களை கொண்டு வந்துள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு ஊரில் தமிழ்நாடு முதலமைச்சர் இருந்து மக்கள் பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு முதல்வர் எவ்வளவு திட்டங்களை கொண்டு வந்துள்ளார். அதில் நாம் பயனாளியாக உள்ளோமா என்பதை பார்க்க வேண்டும். நாம் திட்டங்கள் கிடைக்காமல் விடுப்பட்டு போய் விட்டோ என்று யாரும் கவலை பட வேண்டாம். வரும் ஜூலை 15ம் தேதி தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் முகாம்களை நடப்படப்பட உள்ள அந்த முகாம்களில் 13 வகையான தொகைகள் இருக்க போகிறது. 40 வகையான சேவைகளை உள்ளது. இந்த முகாமில் கலைஞர் உரிமைத் தொகை விடுப்பட்டிருந்தால் மனு கொடுத்து பயன் பெறலாம். 45 நாட்கள் நடைபெறும் முகாமில் மக்கள் கொடுக்கும் மனுவிற்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி பேசினார்.

விழாவில் நாகை வடக்கு ஒன்றியர் செயலாளர் சிக்கல் என். ஆனந்த்.மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் அங்காடி சேகர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஏ.எஸ் .என். ராஜா, மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் அயலக அணி ஜவகர்பாட்ஷா, விவசாய அணி ஜுவானந்தம், தகவல் தொழில் நுட்ப அணி ஆத்மநாதன்,

மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முத்து. ராதா கிருஷ்ணன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார், கீழ்வேளூர் வடக்கு நெற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.நடராஜன், சி.வீரமணி, சேக்முகமது, கே.ரவிக்குமார், டி.பாரதி மோகன், வெண்ணிலாபாபு, தங்க. மனோகரன், கே. மதியழகன், ஆர்.கே.கண்ணன், கிளை செயலாளர் ப.சேதுராமன், மற்றும் ராதா மங்கலம் நாகவிலாஹம் தற்காலத்தூர் எறும்பு கன்னி நடுத்தெரு ஆகிய கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.முடிவில் கிளை செயலாளர் ஆர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.



பெரம்பலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, கௌதமபுத்தர் அறக்கட்டளையில் உள்ள 110 குழந்தைகளுக்கு போர்வை,பாய்,துண்டு மற்றும் சமையலுக்கு தேவையான பொருட்களையும் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் வழங்கப்பட்டது. இதில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத், ஒன்றிய கழகச் செயலாளர் எம்.இராஜ்குமார், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் விஜய், சுதா, தினேஷ், சிவனேசன், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆனந்தன், சுல்தான, கலைச்செல்வன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர் சட்டமன்ற தொகுதி ஓசூர் மாநகர,ஒசூர் ஒன்றியம், சூளகிரி வடக்கு ஒன்றியம் சார்பில் ”ஓரணியில் தமிழ்நாடு உறுப்பி னர்கள் சேர்க்கைக்கான பயிற்சி பாசறை கூட்டம் மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இதில், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் இசை கலந்து கொண்டு பயிற்சியினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்த லைவர் யுவராஜ்,மேயர் எஸ்.ஏ. சத்யா, மாவட்ட பொருளாளர் சுகுமாரன், ஓசூர் தொகுதி பார்வையாளர் வடிவேல், உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, மாநகர நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப மற்றும் வாக்குச் சாவடி முகவர்கள் கழக முன்னணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்டரங்கில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், தொகுதி பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம், மாநகராட்சி மேயர் து.கலாநிதி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பான நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் குறித்த பலர் கலந்து கொண்டனர் .



தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளிக்கு தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் மாணவர்கள் அமர பெஞ்ச் டேபிள்களை வழங்கினார்.உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா,பிசிஆர்.மனோகரன்,முருகன்,சீனிவாசன்,எம்வீடி. கோபால்,கண்ணபெருமாள் மற்றும் தி.மு.க.வினர் உள்ளனர்.